IN THE COURT OF ASSITANT SESSIONS JUDGE, METTUR

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

S.C.No. 175 /2022

Deposition of PW.1 witness of Prosecution/Defence solemnly affirmed by Superintendent/Head Clerk in Sessions Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 23.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சௌந்தர் | **Caste** | : | |
| **S/o** | : | தணிக்காசலம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**

நான் மேட்டூர் இந்திரா நகரில் குடியிருக்கிறேன். நான் மேட்டூர் பஸ் நிலையத்தில் டீக்கடை வைத்துள்ளேன். எனக்கு வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் **அசாஆ.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவேண்டி அனுமதி கோரப்பட்டது அனுமதிக்குப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 12.6.2017 ந்தேதி காலை 8.30 மணியளவில் தூக்கனாம்பட்டி சென்றபோது இவ்வழக்கின் எதிரியான செந்தில்குமார் என்பவர் என்னை தகாத வார்த்தையால் திட்டியதாகவும், போலிசுக்கு மாமா வேலை பார்க்கிறாயா என்று என்னை கேட்டதாகவும், என் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.200/-ஐ எடுத்து கொண்டதாகவும், சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவேன் என கத்தியை காட்டி மிரட்டியதாகவும், எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை வாக்குமூலம் அளித்து விட்டு தற்போது எதிரியுடன்

சமாதானமாகிவிட்டபடியால் அவருக்காக பரிந்து அரசுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றியுள்ள பணம் ரூ.200/- என்னுடையதா என்றால் அது என்னுடையதல்ல. மேற்படி பணம் ரூ.200/- அரசுக்கு ஆதாயம் செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

ஒம்/-சௌந்தர்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF ASSITANT SESSIONS JUDGE, METTUR
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
S.C.No. 175 /2022

Deposition of PW.2 witness of Prosecution/Defence solemnly affirmed by Superintendent/Head Clerk in Sessions Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 23.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தங்கவேல் | **Caste** | : | |
| **S/o** | : | நாச்சிகவுண்டர் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**

நான் மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவேண்டி அனுமதி கோரப்பட்டது அனுமதிக்குப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 12.6.2017 ந்தேதி காலை 8.30 மணியளவில் தூக்கனாம்பட்டி சென்றபோது இவ்வழக்கின் எதிரியான செந்தில்குமார் என்பவர் அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டியதாகவும், போலிசுக்கு மாமா வேலை பார்க்கிறாயா என்று அ.சா.1 ஐ கேட்டதாகவும், அ.சா.1 பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.200/–ஐ எடுத்து கொண்டதாகவும், சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவேன் என அ.சா.1 ஐ கத்தியை காட்டி மிரட்டியதாகவும், மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் நடந்த சம்பவம் குறித்து போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவருக்காக பரிந்து அரசுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

ஒம்/–தங்கவேல்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,

மேட்டூர்.